பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
31 07 2026 FRIDAY 7.15 PM
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நீர்நிலைகளுக்கான சூரிய மின் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- புதிய தொழிலாளர் நலச்சட்டங்கள் அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- மகாராஷ்ட்ராவில் நான்கு மாடி கட்டிடம் இடிந்து விபத்துக்குள்ளானதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்.
- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்காக ஐ நா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக இந்தியா கூறியுள்ளது.
- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் குத்துச்சண்டை பிரிவில் இந்தியாவின் பிரித்தி பவார் மற்றும் Ankush Panghal இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>>

நீர்நிலைகளுக்கான சூரிய மின் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், 5 ஆயிரத்து 70 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

இந்த திட்டத்தின்கீழ், ஒரு மெகாவாட்டிற்கு ஒரு கோடி ரூபாய் என்ற அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயுத்துறையின் சமுத்ரா மந்தன் திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

84 ஆயிரத்து 84 கோடி ரூபாய் செலவில் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இதற்கிடையே, சமுத்ரா மந்தன் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த திட்டத்தில் தொழில்நுட்ப பயன்பாட்டிற்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் இறக்குமதியை குறைப்பதற்கு இந்த திட்டம் உதவிடும் என்றும் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

தொழில்துறை, அரசு மற்றும் தொழிலாளர்களுக்கு இடையே நல்லிணக்கம் நிலவுவது பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் என்று மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பான சர்வதேச உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

தொழிலாளர் நலனுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிய தொழிலாளர் நலச்சட்டங்கள் அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>>>

புதுமை கண்டுபிடிப்புகளை தேசிய இயக்கமாக மத்திய அரசு உருவாக்கியுள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் புதுமை கண்டுபிடிப்புகள் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

அடல் புதுமை இயக்கம், புதுமை கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கம் அளித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்காக ஐ நா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், ஐ நா வின் அமைதி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் இந்தியா ஆதரவு அளித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

ஐ நா அமைதிப்படையில், இந்தியாவின் சார்பில் 3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பணியாற்றுவதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<>>>>>>>

நீதித்துறையின் செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்காக 53 கோடியே 57 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு அர்ஜூன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நீதிபதிகளுக்கு உதவும் வகையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அடிப்படையிலான மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பரிட்சார்த்த அடிப்படையில இந்த மென்பொருள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் திரு அர்ஜூன் ராம் மெக்வால் கூறினார்.

<<<<<>>>>>>>

மகாராஷ்ட்ராவில் நான்கு மாடி கட்டிடம் இடிந்து விபத்துக்குள்ளானதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

தானே மாவட்டத்துக்கு உட்பட்ட Bhiwandi -ல் உள்ள பழமையான இந்த அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விழுந்ததாகவும் இடிபாடுகளுக்கு இடையே மூன்று பேர் சிக்கியுள்ளதாகவும் அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண நிதி வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸும் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதற்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் திரு தேவேந்திர பட்நவிஸ் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் குடிநீர் விநியோகம் மற்றும் நீராதாரங்களை மேம்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக 340 கோடி ரூபாயை மாநில அரசு ஒதுக்கியுள்ளது.

இன்று சென்னையில் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் இதுதொடர்பாக நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குடிநீர் தட்டுப்பாடு இன்றி கிடைப்பதை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும் என்று முதலமைச்சர் இந்த கூட்டத்தில் அறிவுறுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் இதுவரை இல்லாத அளவிற்கு வாக்கு சதவீதம் பதிவானதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு Gyanesh Kumar கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தேர்தலில் 86 சதவீத அளவிற்கு வாக்குப்பதிவு நடைபெற்றதை சுட்டிக்காட்டினார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, தமிழகத்தில் பதிவான அதிக அளவு வாக்கு சதவீதமாக இது உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்காக வாக்காளர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வதாகவும் திரு Gyanesh Kumar கூறினார்.

<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் தீவிரவாதி என்ற சந்தேகத்தின்பேரில் ஒருவரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்தனர்.

*ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் சிறப்பு அதிரடிப்படையினர் இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*Bardhaman பகுதியில் இவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அவரிடமிருந்த முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*<<<<<>>>>>>>*

*ஆந்திராவில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு பின்னர், வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.*

*அமராவதியில் இதனை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு விவேக் யாதவ், கடந்த மாதம் 15-ஆம் தேதி தொடங்கி, இம்மாதம் 24-ஆம் தேதிவரை இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.*

*இந்த பணிகளின்போது, பல்வேறு காரணங்களுக்காக வாக்காளர் பட்டியலில் இருந்து 45 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.*

*நீக்கப்பட்டவர்கள் உரிய காரணங்களுடன் பெயர்களை சேர்க்க விண்ணப்பிக்கலாம் என்றும், இதற்கான கால அவகாசம் அடுத்த மாதம் இறுதிவரை உள்ளதாகவும் திரு விவேக் யாதவ் தெரிவித்தார்..*

*<<<<<>>>>>>>*

*குஜராத்தில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ள நிலையில் அம்மாநிலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிவாரண ஆணையர் திரு Gaurang Makwana கூறியுள்ளார்.*

*காந்தி நகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 13 மாவட்டங்களுக்கு அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.*

*இந்த மாவட்டங்களில் மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்கென 50 சிறப்புக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*தேசிய பேரிடர் மீட்புப்படையின் 17 குழுக்களும், மாநில பேரிடர் மீட்புப்படையின் 30 குழுக்களும் அம்மாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் திரு Gaurang Makwana கூறினார்.*

*<<<<<>>>>>>>*

ஒடிஷாவில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்பு குறித்து ஆய்வு செய்வதற்கென உயர்நிலை குழுக்கூட்டம் அம்மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு சுரேஷ் புஜாரி தலைமையில் இன்று புவனேஷ்வரில் நடைபெற்றது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்புப்பணிகளை, இயல்பு நிலை திரும்பும் வரை நீட்டிப்பதென இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த மழை வெள்ளத்தால் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

நேபாளத்தின் ஒரு சில பகுதிகளில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

Saptari மாவட்டத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இந்த தடை உத்தரவு அமலுக்கு வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இருபிரிவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலையடுத்து இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைதி திரும்ப பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அந்நாட்டு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<>>>>>>>

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் குத்துச்சண்டை பிரிவில் இந்தியாவின் பிரித்தி பவார் மற்றும் Ankush Panghal இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

கிளாஸ்கோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 54 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் பிரித்தி பவார், 5-0 என்ற புள்ளிக்கணக்கில் Zambia-வின் Catherine Mwape-ஐ வென்றார்.

ஆடவர் 80 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Ankush Panghal 5-0 என்ற புள்ளிக்கணக்கில், கனடாவின் Joshua Ofori -ஐ வென்றார்.

ஜூடோ பிரிவில் Asmita Dey, Yamini மற்றும் Harsh Singh இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்தியா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------------

*Svijany* ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*<<<<<END>>>>>>*